**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 711/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. ரம்யா |
| Father's Name/Husband Name: | திரு. சந்திரசேகர் |
| Village : | கீழப்பெரம்பலூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி சேதுராமன் ஆஜர்)**
**முதல் விசாரணை**

(சாட்சியிடம் முதல் விசாரணை செய்ய திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க இயலுமா என்று கூறிய போது தன்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எந்த வித தயக்கமும் இல்லை என்று கூறியதால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி விசாரிக்கப்படுகின்றார்)

நான் தற்போது கீழப்பெரம்பலூர் கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். என்னுடைய கணவர் வெளிநாட்டில் பிழைப்பு நிமித்தமாக வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 20.05.2025ம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் நான் வீட்டிலிருந்தேன். அன்றைய தினம் மாமியார் தங்காயி மற்றும் அவருடைய மகன்கள் சஞ்சீவ் மற்றும் வர்ஷன் மற்றும் என்னுடைய 6 வயது மகன் சரண்ராஜ் ஆகியோர் வீட்டில் இருந்தார்கள். அப்போது எதிரி வீட்டிற்கு வந்து என்னிடம் பிரச்சனை செய்தார். வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறி என் தோளின் மீது கையை வைத்து என்னை குத்தினார். மேலும் வீட்டை விட்டு வெளியே போ என்று சொல்லியும் எதிரி அசிங்கமாக பேசியும் நீ தனியாக இருக்கிறாய் ஏய் புண்ட வா உன் வீட்டுகாரர் வெளிநாட்டில் இருக்கிறார் நீ

என்கூட படுக்க வா என்று அசிங்கமாக பேசினார். நானும் சத்தம் போட்டு கத்திய போது எதிரியின் மனைவி சத்தியா என்பவர் அங்கு வந்தார். மற்ற நபர்கள் வந்து சத்தம் போட்ட பின்னர் எதிரியை அங்கிருந்து அழைத்துச் சென்றார்கள். எதிரி அடிக்கடி பிரச்சனை செய்து சொத்து சம்மந்தமாக பிரச்சனை செய்து வருகிறார். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் குன்னம் போலிசார் எழுதினார். நீதிமன்றத்தில் முதல் நிலை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி 20.05.2025 என்று புகாரில் உள்ளது என்றாலும் 27.05.2025 ம் தேதி தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் 7 நாள் கால தாமதத்திற்கான காரணம் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவருடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் என் கணவருடன் சேர்த்து 4 பேர். ஆஜர் எதிரி சேதுராமன் என் கணவரின் உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். எனது புகாரில் எதிரி யாரோ 3ம் நபர் போல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், எனது பக்கத்து வீட்டுக்காரர் என்று சொல்லியுள்ளேன். எங்கள் குடும்பத்திற்குள் பூர்வீக சொத்து எதுவும் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு மட்டும் எனது மகனின் பெயரில் தான செட்டில்மெண்ட்டாக எழுதி வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். மற்ற நபர்களுக்கு எந்த பாகமும் பிரிக்காத நிலையில் எங்களுக்கு மட்டும் என் மகனின் பெயரில் தானசெட்டில்மெண்ட் வழங்கியதால் எங்களுக்கும் எதிரிக்கும் முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். புகாரை எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் மாலை 5 மணியிருக்கும். போலிசார் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காலை 8 மணிக்கு எனது வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எனது சின்ன மாமியார் தங்காயி மற்றும் தனவேல் உடனிருந்ததாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும், எனது முதல் விசாரணையிலும் நான் சொல்வது போல் எதிரி என்னை அடிக்கவும் இல்லை திட்டவும் இல்லை என்றால் சரியல்ல. எனது மகனுக்கு ஆதரவாக பெற்ற தானசெட்டில்மெண்ட் சொத்தை குடும்ப பாகப் பிரிவினையில் சேர்க்கக்கூடாது என்பதற்காகத் தான் எதிரியின் மீது பொய்யான

புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.